பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

07 07 2025 7 15

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- ஐ.நா. பாதுகாப்பு சபை உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளில் காலத்திற்கேற்ற வகையில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

- மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங், தேசிய உயிரி வங்கியை புதுதில்லியில் தொடங்கி வைத்தார்.

- பீஹார் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல் ஆரம்பகட்ட தீவிர சிறப்பு திருத்தப் பணிகள் நிறைவடைந்துள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

- காஸா போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அமைதி முயற்சிகள் இறுதிக் கட்டத்தை எட்டியிருப்பதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

- உலகக் கோப்பை குத்துச்சண்டைப் போட்டியில் இந்தியா மேலும் 2 தங்கம் மற்றும் ஒரு வெள்ளிப் பதக்கம் வென்றது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

ஐ.நா. பாதுகாப்பு சபை உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளில் காலத்திற்கேற்ற வகையில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பிரேசிலின் ரியோடி ஜெனிரோவில் நடைபெறும் பிரிக்ஸ் உச்சி மாநாட்டின் தொடக்க நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், ஐ.நா. பாதுகாப்பு சபையின் தற்போதைய செயல்பாடுகள் காலத்திற்கு ஏற்ற வகையில் இல்லை என்றார்.

பிரிக்ஸ் அமைப்பு விரிவுபடுத்தப்பட்டிருப்பது காலத்திற்கேற்ப தன்னை மாற்றிக்கொள்ளும் திறன் இந்த அமைப்புக்கு இருப்பதை வெளிப்படுத்துவதாக கூறினார்.

இதேபோன்று ஐ.நா. பாதுகாப்பு சபை, உலக வர்த்தக அமைப்பு மற்றும் உலக வங்கி போன்ற பன்னாட்டு அமைப்புகளை மாற்றியமைக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பன்னாட்டு அமைப்புகளில் தெற்கத்திய நாடுகளுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

உலகப் பொருளாதாரத்திற்கு அதிக அளவில் பங்களிப்பை வழங்கி வரும் இந்தியா உள்ளிட்ட நாடுகள் உலகின் மொத்த மனித குலத்தில் மூன்றில் இரண்டு பங்கை கொண்டிருக்கும் நிலையில், இவர்களது குரலுக்கு மதிப்பளிக்கும் வகையில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும் என்றும் திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டார்.

இந்த மாநாட்டில், ஐ.நா. பாதுகாப்பு சபையில் இந்தியா மற்றும் பிரேசிலுக்கு முக்கிய பங்கு வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் ஜம்ம-கஷ்மீரின் பஹல்காமில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு பிரிக்ஸ் அமைப்பின் சார்பில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

தீவிரவாதத்தை முற்றிலும் ஒழிக்க பாடுபடுவதென்றும் பிரிக்ஸ் நாடுகளின் தலைவர்கள் உறுதிபூண்டுள்ளனர்.

தீவிரவாத எதிர்ப்பில் இரட்டை நிலைப்பாடுகளை தவிர்க்க வேண்டும் எனவும் மாநாட்டில் வலியுறுத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முன்னதாக இந்தோனேஷியா, பிரிக்ஸ் அமைப்பின் புதிய உறுப்பினராக சேர்த்துக்கொள்ளப்பட்டதுடன், மலேசியா, தாய்லாந்து, பெலாரஸ் உள்ளிட்ட 10 நாடுகள் பங்குதாரர் நாடுகளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங், தேசிய உயிரி வங்கியை தொடங்கி வைத்தார்.

புதுதில்லியில் உள்ள சி.எஸ்.ஐ.ஆர். மரபணுவியல் மற்றும் ஒருங்கிணைந்த உயிரியல் நிறுவனத்தில் இந்த மையம் தொடங்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் இருந்து 10 ஆயிரம் பேரின் மரபணு குறித்த விரிவான விவரங்கள், வாழ்க்கை முறை மற்றும் மருத்துவ தரவுகள் சேகரிக்கப்பட்டு இந்த உயிரி வங்கியில் பராமரிக்கப்படுகிறது.

நிகழ்ச்சியில் பேசிய திரு. ஜிதேந்திர சிங், நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் தங்களது மரபணு அமைப்பு, வாழ்க்கை முறை போன்ற சூழலுக்கேற்ற தனிப்பட்ட சிகிச்சையை தரக்கூடிய நிலை உருவாகி இருப்பதாக கூறினார்.

உடல் பருமன் பாதிப்பு அதிக அளவில் இருப்பதை சுட்டிக்காட்டிய அவர், மக்கள் தொகை சார்ந்த சுகாதார நடவடிக்கைகளின் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

பன்முகத்தன்மை கொண்ட இந்தியாவில் இதுபோன்ற உயிரி வங்கி இன்றியமையாதது என்றும் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங், தேசிய உயிரி வங்கியை தொடங்கி வைத்தார்.

புதுதில்லியில் உள்ள சி.எஸ்.ஐ.ஆர். மரபணுவியல் மற்றும் ஒருங்கிணைந்த உயிரியல் நிறுவனத்தில் இந்த மையம் தொடங்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் இருந்து 10 ஆயிரம் பேரின் மரபணு குறித்த விரிவான விவரங்கள், வாழ்க்கை முறை மற்றும் மருத்துவ தரவுகள் சேகரிக்கப்பட்டு இந்த உயிரி வங்கியில் பராமரிக்கப்படுகிறது.

நிகழ்ச்சியில் பேசிய திரு. ஜிதேந்திர சிங், நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் தங்களது மரபணு அமைப்பு, வாழ்க்கை முறை போன்ற சூழலுக்கேற்ற தனிப்பட்ட சிகிச்சையை தரக்கூடிய நிலை உருவாகி இருப்பதாக கூறினார்.

உடல் பருமன் பாதிப்பு அதிக அளவில் இருப்பதை சுட்டிக்காட்டிய அவர், மக்கள் தொகை சார்ந்த சுகாதார நடவடிக்கைகளின் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

பன்முகத்தன்மை கொண்ட இந்தியாவில் இதுபோன்ற உயிரி வங்கி இன்றியமையாதது என்றும் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

பீஹார் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல் ஆரம்பகட்ட தீவிர சிறப்பு திருத்தப் பணிகள் நிறைவடைந்துள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்தப் பட்டியலில் பல்வேறு தரப்பிலும் தெரிவிக்கப்படுவது போன்று இதுவரை எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

கடந்த மாதம் 24ஆம் தேதிக்கு முன்னதாக வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருந்த வாக்காளர்களில் ஒரு கோடியே 69 லட்சம் பேரிடமிருந்து கணக்கெடுப்பு தொடர்பான படிவம் பெறப்பட்டிருப்பதாகவும், வரும் ஆகஸ்ட் ஒன்றாம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வரைவுப் பட்டியலில் கணக்கெடுப்பு படிவம் பெறப்பட்ட வாக்காளர்களின் பெயர்கள் இடம்பெற்றிருக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் படிவங்களை சமர்ப்பிக்க இன்னும் 19 நாட்கள் அவகாசம் இருப்பதாகவும், அதற்குள் வாக்காளர்கள் தங்களது விவரங்களை இணையதளம் மற்றும் செயலி வாயிலாக பதிவு செய்துகொள்ளலாம் என்றும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

<<<<>>>>

கேரளாவில் இரண்டு நாள் பயணமாக குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் குருவாயூர் சென்றுள்ளார்.

இன்று காலை குருவாயூர் கோயிலில் வழிபாடு செய்யும் அவர், பின்னர் எர்ணாகுளத்தில் உள்ள தேசிய சட்டப் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் கலந்துரையாடுகிறார்.

<<<<>>>>

முருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான தமிழகத்தின் திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் குடமுழுக்கு விழா வெகுவிமரிசையாக நடைபெற்றது.

இக்கோவிலில் 300 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் முடிவடைந்து இன்று குடமுழுக்கு நடத்தப்பட்டது.

இதில் தமிழகம் மட்டுமின்றி உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் வந்திரந்த முருக பக்தர்கள் பங்கேற்று தரிசனம் செய்தனர்.

<<<<>>>>

தமிழகத்தின் திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியில் நடைபெற்ற சிறுதானிய பாரம்பரிய விதைத் திருவிழாவில் ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர்.

சாமை, வரகு, தினை, குதிரைவாலி போன்ற சிறுதானியங்களின் சிறப்பை விளக்கும் வகையில் இந்த விழா நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte – Ravichandran – 47 Sec)

<<<<>>>>

காஸா போரை நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அமைதி முயற்சிகள் இறுதிக் கட்டத்தை எட்டியிருப்பதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

இது தொடர்பாக இஸ்ரேலுடன் சேர்ந்து அமெரிக்கா பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வாரத்திற்குள் இதற்கான உடன்பாடு எட்டப்படும் என்று நம்புவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அமெரிக்காவில் தொழிலதிபர் எலன் மஸ்க் புதிய கட்சி தொடங்கியிருப்பது தேவையற்றது என்றும் திரு. டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

உலகக் கோப்பை குத்துச்சண்டைப் போட்டியில் இந்தியா மேலும் 2 தங்கம் மற்றும் ஒரு வெள்ளிப் பதக்கம் வென்றது.

மகளிர் 57 கிலோ எடைப் பிரிவில் Jaismine-னும், 80 கிலோ எடைப்பிரிவில் Nupur-ம் தங்கப் பதக்கம் வென்றனர்.

ஆடவர் 70 கிலோ எடைப் பிரிவில் ஹிதேஷ் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

அஸ்தானாவில் நடைபெற்ற இப்போட்டியில் இந்தியா 3 தங்கம், 5 வெள்ளி, 3 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

------------

இங்கிலாந்துக்கு எதிரன இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 336 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

பர்மிங்ஹாமில் நடைபெற்ற இப்போட்டியின் கடைசி நாளான நேற்று மழை காரணமாக தாமதமாக போட்டி தொடங்கிய நிலையில் 608 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணி, அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து 271 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக இரண்டு இன்னிங்சிலும் சேர்த்து ஆகாஷ் தீப் 10 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

430 ரன் குவித்த கேப்டன் ஷுப்மன் கில் ஆட்டநாயகன் விருதைப் பெற்றார்.

-------------

உலகக் கோப்பை குடோ போட்டியில் இந்தியா 2 தங்கம், 7 வெள்ளி, 3 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

இப்போட்டியின் 11 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் ருத்ரானி பட்டேலும், 16 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் Pema Thakur-ம் தங்கப் பதக்கம் வென்றனர்.

-------------

பிரான்சில் நடைபெற்ற சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Meghna Reddy பட்டம் வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 21-10, 21-14 என்ற செட் கணக்கில் ஸ்விட்சர்லாந்தின் Dounis Pelupessy-ஐ வென்றார்.

------------

ஆசிய இளையோர் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா 3 தங்கம், 6 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

கிர்கிஸ்தானின் பிஷ்கேக்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 15 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் பிரிவுகளில் Jia, Disksha, Purvi தங்கப் பதக்கம் வென்றனர்.

--------------

உகாண்டா பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீகுமார் பட்டம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர் 21-15, 21-19 என்ற செட் கணக்கில் சகநாட்டு வீரரான சஷாங்க் குமாரை வென்றார்.

<<<<The End>>>>